அசல் வழக்கு எண். 18/2017 தேதி 22-02-2024

வா.சா.1 - கிருஷ்ணகுமாரி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா வழக்கு 4 சர்வே எண்களில் உள்ள சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 4 சர்வே எண்களில் உள்ள சொத்துகளுக்கும் சர்வே எண் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான்குமால் விவரம் குறிப்பிடவில்லை. தாவா சொத்துக்கள் எவ்வாறு உள்ளது என்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1 மற்றும் 4 பிரதிவாதிகள் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் என்னை விசாரணைக்கு அழைக்கவில்லை. 1 மற்றும் 4 பிரதிவாதிகள் சொத்தை மோசடியாக கிரைய பத்திரம் ஏற்படுத்தியது சம்மந்தமாக எனக்கும் சில நபர்களுக்கும் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. 16.11.2016 ம் தேதி பெருமாள் கொடுத்த புகார் சம்மந்தமாக ஆவணங்களுடன் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரியல்ல.

2. 4 ம் பிரதிவாதி ராமசாமி கொடுத்த புகாரின் பேரில் 09.11.2016 ம் தேதி விசாரணைக்கு ஆஜராக எனக்கும் மற்ற நபர்களுக்கும் அழைப்பாணை வந்தது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி ராமசாமி கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்.01/2017 ஆக என் மீதும், வீரம ரெட்டியார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி பெருமாள் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்.02/2017 ஆக என் மீதும், மற்ற சிலர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் விசாரணைக்கு செல்லவில்லை. வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி வழக்குகளில் எங்கள் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்ற காரணத்தால் உண்மையை மறைத்து தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. தாவா வழக்கு நகலை மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் காண்பித்து வழக்கு உள்ள விவரத்தை தெரிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டாம் என எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

3. எதிர் வழக்குரையில் கண்ட விவரங்கள் எனக்கு தெரியாது. எதிர் வழக்குரைக்கு எனது தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. வழக்கு பற்றிய விவரம் முழுமையாக எனக்கு தெரியாது. D பட்டியல் உள்ள 2 வது இலக்க சொத்தான சர்வே எண்.820/8 பி யில் உள்ள 22 செண்ட் நிலம் 4 ம் பிரதிவாதி ராமசாமியின் தந்தைக்கு பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பின் 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதியின் தந்தை வீரபத்ரரெட்டியார் ஆவார். வீரபத்ர ரெட்டியார் மற்றும் அவருடன் பிறந்தவர்கள் சொத்துக்களை சுமார் 37 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்து கொண்டனர் . வாய்க்காரராக பிரித்து கொண்டு சொத்துக்களை அனுபவம் செய்ததின் அடிப்படையில் அவர்களுக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டது. அவ்வாறு தனிப்பட்டா எற்பட்டதின் அடிப்படையில் வீரம ரெட்டியார் மருமகளான எனக்கு கிரையம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

4. என் கணவர் சுந்தரம். சுந்தரத்தின் தகப்பனார் அக்குள் ரெட்டியார். அக்குள் ரெட்டியாருக்கு பிரிந்த சொத்துக்களை சுந்தரத்திற்கு கொடுத்தும் எனது கணவர் சுந்தரம் மேற்படி சொத்துக்களை எனது மகன் வேல்குமாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். எனது கணவர் சொத்துக்களை எனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்க காரணம் என்னவென்றால் விருப்பத்தின் பேரில் எழுதி வைத்துள்ளார். 1 மற்றும் 4 பி ரதிவாதி கள் பெயரில் பட்டா உள்ள சொத்துக்களை என் மகன் பெயரில் எதற்கான செட்டில்மெண்ட் எழுதினோம் என்றால் வீரம ரெட்டியார் பெயரில் பட்டா இருந்ததால் செட்டில் மெண்ட் எழுதி வைத்துள்ளார். C பட்டியல் சொத்து 4 வது இலக்க சொத்தான சர்வே எண்.820/2 D உள்ள 20 செண்ட் இடம் 4 ம் பிரதிவாதி ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வீரம ரெட்டியார் பெயரில் பட்டா உள்ளது. B

பட்டியல் 4 வது இலக்க சொத்தான சர்வே எண்.800/5A சொத்தானது 1ம் பிரதிவாதி பெருமாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமனார் அக்குள் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதாகும்.

5. சர்வே எண். 820/2D, 800/5A. 820/2B ஆகிய சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் அக்குள் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 800/4C கிணற்றடி நிலம் கூட்டு பட்டாவில் தான் உள்ளது. அதில் 4ம் பிரதிவாதி ராமசாமிக்கு ஒரு பாகமும் மற்றும் 1ம் பிரதிவாதி பெருமாளுக்கு ஒரு பாகமும் உள்ளது. சர்வே எண்.800/4C ல் எங்களுக்கு இரண்டு பாகம் பாத்தியப்பட்டதாகும். அதன் பட்டா எண். 2246 என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்த்து கொள்ளவும், கிணற்றடிக்கு சென்றுவரவும் 1 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. ஆத்துவாரி வழியாக தான் செல்ல வேண்டும். பொதுவான கிணற்றிற்கு செல்வதற்கு மேற்படி சொத்துக்களில் உள்ள வரப்பு வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண்.800/2B மற்றும் 820/7E ஆகிய சொத்துக்கள் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொதுவான சொத்து என்றால் சரியலல.

6. மேற்படி பொதுவான சொத்தில் பாகத்தை மிகைப்படுத்தி ஆவணம் எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் மாமூல் வழி தடை நடை பாத்தியம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. மாமூல் வழி இல்லை. மாமூல் வழி இருப்பதால் தான் அதை குறிப்பிட்டு வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5 HP மோட்டார் பம்பு செட்டில் பாதி பாகம் உள்ளதாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையான ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை. அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

வா.சா.ஆ-1, வா.சா.ஆ-3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய கிரைய ஆணங்களுக்கான மூல ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எந்த மூல ஆவணங்கள் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. 1 மற்றும் 4 பிரதிவாதிகளின் சொத்துக்களை மோசடி செய்யும் வகையில் அதிகாரிகள் துணையுடன் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் ச ரியல்ல. என் மீது உள்ள குற்ற வழக்குகளில் இருந்து தப்பிக்கும் நோக்கில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எத்தனை வழக்கு உள்ளது என்றால் வழக்கு எதுவும் இல்லை. பிரதிவாதிகளை மோசடி செய்யும் எண்ணத்தில் ஆவணங்களை தயார் செய்து கொண்டு தாவா வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு பிரிந்த சொத்து எங்களுக்கு வேண்டும். தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**